[1994 மே 2

எனவேதான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே ஒவ்வொரு மாதமும் 5-ந்தேதி பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போல் 6 இடங்களில் சென்ற வாரம்கூட திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில்கூட 12ந் தேதி பயிற்சி தரப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பயிற்சி வகுப்புகளில் பங்குபெற ஆர்வம் காட்டுபவர்கள் அங்கே சென்று அந்தப் பயிற்சியைப் பெற்று வரலாம். அவர்கள் போய் வருவதற்கு செலவுக்கான தொகையும் இதர பொருள்களும் அரசு சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 469-ம், 470-ம் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண் 471. திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

471—

சென்னையில் குப்பை பொறுக்கும் சிறார்களுக்குப் புகலிட இல்லங்கள் கட்டுதல்

*** *23703*—திரு. ஆர்.பி. பரமசிவம்:**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னையில் குப்பைப் பொருள்களை சேகரிக்கும் சிறாருக்கும், இதர சிறார்களுக்கும் புகலிட இல்லங்கள் எங்கெங்கு கட்டப்படவுள்ளது.

(ஆ) இதர நகரங்களிலும் இது போன்ற இல்லங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இந்த ஆண்டு கோவை, மதுரை, வேலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் 50 சிறுவர்கள் ஒருவேளை உணவோடு தங்கவைக்கப்படுவார்கள். இதர நகரங்களில் இதுபோன்ற இல்லங்கள் கட்டுவதற்கு அந்தந்த இடங்களில் உள்ள சிறுவர்களைப் பொறுத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கூறப்பட்ட பதிலுக்கு நன்றி. சென்னை போன்ற பெரிய

1994 மே 2]

நகரங்களில் ஏழை எளிய, அனாதைப் பிள்ளைகள், சிறார்கள் குப்பைகளைப் பொறுக்கி, அதைக் கொடுத்து அதன்மூலம் பிழைக்கின்ற ஒரு அவல நிலையில் இருந்து வருகிறார்கள். அதேநேரத்தில் அந்த ஏழைச் சிறுவர்களைப் பயன்படுத்தி சமூக விரோதிகள் சமூகவிரோத செயல்களில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களுடைய வாழ்க்கையையே வேறு வழிகளில் செலுத்துகின்ற வகையில் இருக்கிற சூழ்நிலையில் இதுபோன்ற சிறார் இல்லங்களை ஏற்படுத்தி அந்தச் சின்னஞ்சிறு உள்ளத்தை நல்வழியில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அதேநேரத்தில் அவர்களுக்கு அறிவொளி மூலமாகக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் 7 சிறார் இல்லங்கள், தொண்டு நிறுவனங்களோடு சேர்ந்து நடத்தப்படுகிறது. இதற்கு நம்முடைய தமிழக அரசின் சார்பாக 40 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு தொண்டு நிறுவனத்துக்கும் மானியம் வழங்கப்படுகிறது. முதன் முறையாக மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தச் சிறார்கள் எங்கு இருந்தாலும் அவர்களுக்கு அடையாள அட்டையை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த அடையாள அட்டை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதைப்போன்ற சிறுவர் இல்லங்களில் வாழ்க்கைக் கல்வி அளிப்பதற்கும், தொழில் பயிற்சி செய்வதற்கும் யூனிசெப் நிறுவனம் தமிழக அரசுக்கு ஒத்துழைப்பை நல்கி இருக்கிறது. அந்த வகையில் வாழ்க்கைக் கல்வியும் தொழிற் பயிற்சியும் இந்த நிறுவனங்களில் அவர்களுக்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்பட்ட எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்தில் இதுபோன்ற சின்னஞ் சிறார்கள் நிறையப் பேர் பேப்பர்களை, குப்பைகளைப் பொறுக்கிப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு சிறார் இல்லம் ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விழுப்புரத்தில் தொண்டு நிறுவனம் மூலமாக சிறார் இல்லம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தேவையைக் கருதி இன்னும் அதிகம் வேண்டும் என்று சொன்னா துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை செய்கின்ற இந்த நல்ல காரியத்திற்கு நன்றி சொல்லி, நிதி நிலைக்கு ஏற்ப சில இடங்களில் மட்டுமே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். தேவைப்படுகின்ற எல்லா இடங்களிலும் அரசின் சார்பாகவோ அல்லது தொண்டு நிறுவனங்களின் சார்பாகவோ செய்ய அரசு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நான் நிதி நிலை பற்றிப் பேசவே இல்லையே. ஏனென்றால், எங்கெங்கே தெரு ஓரச் சிறுவர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கங்கே துவக்கப்படுவதற்கு அனைத்து நிதிகளையும் யூனிசெப் தருவதற்குத் தயாராக இருக்கிறது; மத்திய அரசும் தருவதற்கு தயாராக இருக்கிறது. ஆகவே, துவக்கப்படுவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் இந்தச் சிறுவர்களுக்கு முன்பு உணவு அளிக்கப்படவில்லை. ஆனால் நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1993-94—ஆம் ஆண்டு மட்டும் அதற்காக செலவினத் தொகையாக 8.50 லட்சம் ஒதுக்கி, ஒருவேளை உணவு அளிக்கவும் உத்திரவிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரு ஓரச் சிறுவர்களுக்காக இல்லங்களை அமைக்கும் முயற்சியில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் தெரு ஓரச் சிறுவர்களை எவ்வாறு வகைப்படுத்தி அவர்களுக்கு நன்மை பயக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரு ஓரச் சிறுவர்கள் 3 வகைகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். தெருவிலே வாழக்கூடிய சிறுவர்கள், சாலை ஓர நடைபாதைகளில் சிறிய பணிகளில் ஈடுபட்டு வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் பணி முடிந்த பின்னர் தங்களது குடும்பத்தினரை சென்று அடைய வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்களுக்கும் உதவி

1994 மே 2]

அளிக்கப்படுகிறது. இரண்டாவது வகை, தெரு ஓரச் சிறுவர்கள் முழுவதும் சாலையை நம்பியே வாழ்கிறார்கள். அவர்கள் தங்களுடைய குடும்பத்தோடு எந்த உறவையும் வைத்துக்கொள்வது இல்லை. அவர்களுக்கும் அரசு உதவி வழங்குகின்றது. மூன்றாவது வகையான தெரு ஓரச் சிறுவர்கள் பெரும்பாலும் தெருவிலே சிறுவர்களைப் போல காணப்படுவார்கள். ஆயினும் அவர்கள் முற்றிலும் தங்களது குடும்பங்களிலிருந்து புறக் கணிக்கப்பட்ட நிலையில் தெருவையே நம்பி வாழக்கூடிய அநாதைச் சிறுவர்கள் ஆவார்கள். இவர்களையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டு, இவர்களுக்கும் எல்லா உதவித் தொகைகளையும் வழங்குகின்றது. இப்படி தெரு ஓரத்தில் வாழக்கூடிய அந்தச் சிறுவர்களுக்கு கல்விப் பயிற்சி அளிப்பதற்கும், தொழில் பயிற்சி அளிப்பதற்கும் ஒவ்வொரு இல்லத்திற்கும் 7500 ரூபாய் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 472. திரு.ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

472—

திருப்பத்தூர் தொகுதி வளர்ச்சிக்கு அப்பகுதியிலுள்ள சந்தன மரத்தின் மூலம் கிடைக்கும் வருவாயைச் செலவிடுதல்.

** 21277—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலையில் கிடைக்கும் சந்தன மரங்களால் கிடைக்கும் வருமானத்தில் 10 சதவீதம் திருப்பத்தூர் தொகுதி வளர்ச்சிக்கு அரசு செலவு செய்ய ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்கெனவே இது சம்பந்தமாக ஆவன செய்யப்படுகிறது. தமிழக அரசு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனம் என்றாலே எல்லோருக்கும் ஜவ்வாது மலைதான் ஞாபகத்திற்கு வரும். இந்தியாவிலே முதல் தரமான சந்தன மரம்